# கனடாவிற்குப் புதியவரா?

## நூலகத்தோடு இணையுங்கள். அது இலவசமானது!

### உங்கள் பிள்ளை பாடசாலையில் திறமையாக செயற்பட உதவுங்கள்

- வீட்டிலே வாசிப்பதற்காக நூல்களை இரவல் பெறமுடியும். நூலகத்திலே ஆங்கிலம் மற்றும் பல்வேறு மொழிகளில் அதிக நூல்கள் உள்ளன. எந்த மொழியிலாயினும் உங்கள் பிள்ளைக்கு வாசித்து விடுவீர்களானால் அது அப்பிள்ளை ஆங்கிலம் கற்பதற்குப் பெரிதும் உதவும்.
- உங்கள் பிள்ளையைக் கோடை காலங்களில் நடை பெறும் கோடை கால வாசிப்பு கழகத்திலும் வேறு காரியத்திட்டங்களிலும் சேருமாறு ஊக்குவியுங்கள்.
- நூலக ஊழியர்கள் உங்கள் பிள்ளையினுடைய பாடசாலைத் செயற்றிட்டங்களுக்கு உதவி செய்வார்கள்.

### புதிதாக வந்தோருக்கான சேவைகள் பற்றிய தகவல்களைப் பெறுங்கள்

- புதிதாக வந்தோருக்கென அரசினதும் சமூகத்தினதும் இலவசமான பல காரியத் திட்டங்கள் உள்ளன. அவை பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் ஆங்கிலம் கற்பதற்கு உதவக் கூடிய நூல்களையும் ஒலி நாடாக்களையும் இரவலாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

### வேலை ஒன்று பெறுவதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்

- தொழில் ஒன்றினை எவ்விதம் தேடுவது என்பது பற்றி அறிந்து கொள்ளுங்கள். பல்வேறு தொழில்கள் பற்றிய தகவல்கள் நூலகத்தில் உள்ளன.
- கல்வி மற்றும் தொழில் சார்ந்த தகைமைகள் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் கல்வித் தராதரம் தொழிலிற்கு ஏற்றதா என மதிப்பீடு செய்வது மற்றும் பல தொழில்களையும் வேலைகளையும் பற்றி எவ்விதம் அறிவது என்பது பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

### பல்வேறு மொழிகளில் உள்ள நூல்கள், CD க்கள் ( குறுந்தட்டு) மற்றும் வீடியோக்களை( ஒலி இழை நாடாக்கள்) பெற்றுக் கொள்ளுங்கள்.

- நூலகத்திலே புத்தகங்கள்,ஒலி நாடாக்கள், CD குறுந்தட்டுக்கள்,மற்றும் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் பல்வேறு மொழிகளில் உள்ளன

### கணினிகளை உபயோகியுங்கள் இணையத்தைப் பாவியுங்கள்

- இணையம் உபயோகித்தல் இலவசம்
- உலகெங்கணுமிருந்து பல்வேறு மொழிகளில் செய்திகளை வாசியுங்கள்
- இணையம், மின்அஞ்சல் மற்றும் நூலகத்தை உபயோகித்தல் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

### உங்கள் குடும்பத்தவரோடு களிப்புடன் செலவிடுங்கள்

- கதை சொல்லல் போன்ற குடும்ப நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுங்கள்
- உங்கள் ஆங்கிலத் திறனை வளர்க்கக் கூடியதும் மற்றும் கனடிய வாழ்க்கைக்கு உங்களை இசைவு படுத்தக் கூடிய காரியத் திட்டங்களில் பங்கு கொள்ளுங்கள்
- குளிரூட்டப்பட்ட எமது நுலகங்களில் வந்து ஓய்வாயிருங்கள்

## நூலகத்தோடு இணைந்து கொள்ளுங்கள்

- நூலகத்தோடு இணைவதற்குத் தேவையானவை
  - உத்தியோக பூர்வமான இனம் காணக்கூடிய ஏதாவது ஒன்று
  - விலாச அத்தாட்சி - தொலைபேசி, மின்கட்டண அல்லது கேபிள் T.V பற்றுச் சீட்டு
- பிள்ளைகள் தமக்கென சொந்தமான நூலக அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்

Join the Library. It’s Free. Tamil